# TNPSC GROUP II/IIA MAIN EXAM 2025

## MODEL EXAM - 2

## கட்டாய தமிழ் தகுதித் தேர்வு

**Total Marks: 100** **Time : 3 hrs**

**கேள்வி எண் 1** **10 மதிப்பெண்கள்**

1. **பின்வரும் பகுதியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதுக**

பல ஓவியங்கள் மற்றும் சிலைகள் நவீன இந்திய வரலாற்றின் முதன்மை ஆதாரங்களாக உள்ளன. அவை தேசியத் தலைவர்களின் சாதனைகளையும், வரலாற்றுப் பிரமுகர்கள் பற்றிய தகவல்களையும் நமக்கு நிறைய தருகின்றன. இந்தியக் கட்டடக் கலையின் கலை அம்சம் மற்றும் தொழில்நுட்பத்தின் சான்றாக புனித பிரான்சிஸ் ஆலயம் (கொச்சி), புனித லூயிஸ் கோட்டை (பாண்டிச்சேரி), புனித ஜார்ஜ் கோட்டை (சென்னை), புனித டேவிட் கோட்டை (கடலூர்), இந்தியா கேட், டெல்லி பாராளுமன்றம், குடியரசுத் தலைவர் மாளிகை ஆகியன உள்ளன. சமய, கலாச்சார, வரலாற்று மதிப்பு மிக்க மற்ற பொருள் மூலங்கள் சேகரிக்கப்பட்டு அவை அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்படுகின்றன.

**கேள்வி எண் 2:** **10 மதிப்பெண்கள்**

2. **பின்வரும் பகுதியைத் தமிழில் மொழிபெயர்க்கவும்**

The French East India Company established factories in different parts of India, particularly in the coastal regions such Mahe, Karaikal, Balasore and Qasim Bazar. These were a few important trading Centers of the French East India Company. The vision of the French power in India was further reinforced by the appointment of Joseph Francois Dupleix as the Governor of the French East India Company in 1742. He succeeded Dumas as the French governor of Pondicherry.

**கேள்வி எண் 3:** **10 மதிப்பெண்கள்**

3. **கீழ்க்காணும் பகுதியை அதன் அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவில் சுருக்கி உங்கள் சொந்த நடையில் எழுதுக. தலைப்புத் தேவையில்லை**

பாப்னா விவசாய எழுச்சி என்பது விவசாயிகளால் நடத்தப்பட்ட, ஜமீன்தார்களின் அடக்குமுறைக்கு எதிரான இயக்கமாகும். இக்கலகம் வங்காளத்தின் பாப்னாவில் உள்ள யூசுப்சாகி பர்கானாவில் கேசப் சந்திரா ராய் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. ஜமீன்தார்கள், விவசாயிகளிடமிருந்து, சட்டத்திற்கு புறம்பான முறையில், வற்புறுத்தி வரி வசூலித்தல், அதிகப்படியான வாரம் (வரி) வசூலித்தல், மற்ற பிற வரிகளையும் வழக்கமாக வசூல் செய்தனர். விவசாயிகள் வாடகை செலுத்தவில்லை என்ற போலி காரணங்களை கூறி அடிக்கடி நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

நாளடைவில் ஜமீன்தார்களால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் பெருங்கூட்டமாகக் கூடி கிராமங்கள் தோறும் சென்று ஜமீன்தார்களின் அச்சுறுத்தல்களை எடுத்துக்கூறி மற்ற விவசாயிகளும் தங்களுடன் இணையும்படி செய்தனர். போராட்ட செலவினங்களை கட்டுப்படுத்த விவசாயிகளிமிருந்து நிதி திரட்டப்பட்டது. போராட்டம் படிப்படியாக பாப்னா முழுவதும் பரவி, பின்னர் கிழக்கு வங்காளத்தின் மற்ற மாவட்டங்களுக்கும் பரவியது. அப்பகுதி எங்கும் விவசாய சங்கங்கள் அமைக்கப்பட்டன. போராட்டத்தின் முதன்மை நோக்கம் சட்டத்தை எதிர்ப்பதாக இருந்தது.

ஜமீன்தார்கள் விவசாயிகளை கட்டாயப்படுத்திய போது மட்டும் மிகச் சிறிய அளவில் வன்முறை நடைபெற்றது. போராட்டத்தில், ஜமீன்தாரர்களின் வீடுகளை, கொள்ளையடித்ததாக சில நிகழ்வுகளே இருந்தன. நீதிமன்ற ஆணைகளை காவல் நிலையங்கள் செயற்படுத்த முயன்ற போது அதனை எதிர்த்து விவசாயிகள், ஒரு சில தாக்குதல்களை காவல் நிலையங்கள் மீதும் தொடுத்தனர். ஜமீன்தார்களும் ஜமீன்தார்களின் முகவர்களும் மிகவும் அரிதாகவே கொல்லப்பட்டனர் அல்லது காயப்படுத்தப்பட்டனர். போராட்டத்தின் வாயிலாக விவசாயிகள் சட்ட விழிப்புணர்வு மற்றும் அவர்களது சட்ட உரிமைகளை மேம்படுத்தினர். மக்களை ஒருங்கிணைத்து சங்கங்களை உருவாக்கி அமைதியான முறையில் எதிர்க்கும் ஆற்றலையும், வலிமையையும், விழிப்புணர்வையும் வளர்த்துக் கொண்டனர்.

**கேள்வி எண் 4:** **10 மதிப்பெண்கள்**

4. **பின்வரும் பகுதியைக் கவனமாகப் படித்து, அதன் இறுதியில் உள்ள வினாக்களுக்கு சுருக்கமாகவும், தெளிவாகவும் சரியான விடை எழுதுக**

புறநானூறு என்னும் நூலில் அறப்போர் குறித்த செய்திகள் இடம்பெற்றுள்ளன. அரசன் ஒருவன் மற்றொரு நாட்டு அரசன் மீது போர் தொடுக்கும் முன்பு பசுக்களையும் அறவோரையும் பெண்களையும் பிணியாளர்களையும் போர் நிகழும் இடத்தைவிட்டு புறத்தே போய்விடும்படி எச்சரித்த பின்னரே படையெடுப்பு நிகழும். இந்த அறப்போர் முறை முதுகுடுமிப் பெருவழுதியிடம் அமைந்திருந்ததாக நெட்டிமையார் என்ற புலவர் பாராட்டுகிறார். மேலும் படையெடுத்து வரும் பகைவன் மீது, மறைந்து நின்று அம்பு எய்தும் நிலையங்கள் 'ஞாயில்கள்' என்று அழைக்கப்பட்டன.

1. இப்பத்தியில் இடம்பெற்றுள்ள நூலின் பெயர் யாது?
2. நெட்டிமையாரால் பாராட்டப்படும் அரசர் யார்?
3. 'ஞாயில்கள்' என்றால் என்ன?
4. போருக்கு முன்னர் எச்சரிக்கப்படவேண்டியவர்கள் யார்?
5. பிணி என்பதன் பொருள் யாது?

**கேள்வி எண் 5:** **10 மதிப்பெண்கள்**

5. **பின்வரும் சுருக்கக் குறிப்பிலிருந்து விரிவாக்கம் செய்தல் (300 வார்த்தைகளுக்கு மிகாமல்)**

**தமிழ் இலக்கியங்கள் உணர்த்தும் வாழ்வியல் நெறிகள் - காதல் - நட்பு – உதவி – வாய்மை – விருந்தோம்பல்**

**கேள்வி எண் 6:** **15 மதிப்பெண்கள்**

6. **பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று குறித்து 300 சொற்களில் கட்டுரை வரைக**

1. "திருவள்ளுவரும் நிலையாமைக் கோட்பாடும்" – கட்டுரைக்க.
2. 'வள்ளுவரின் மானுட மேம்பாட்டுச் சிந்தனை' – குறித்துக் கட்டுரைக்க.
3. மனிதனுக்கு மான உணர்ச்சி வேண்டும் என்பதை வள்ளுவர் எவ்வாறு வலியுறுத்துகிறார்?
4. ஊழ் அதிகாரம் மூலம் வள்ளுவர் உணர்த்துவது யாது?
5. மருந்து - இன் சிறப்புகளாக வள்ளுவர் கூறுவது யாது?

**கேள்வி எண் 7:** **15 மதிப்பெண்கள்**

**அலுவலகக் கடிதம் (ஏதேனும் ஒன்று)**

1. புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் பயனடைந்த மாணவர்களின் நிலை குறித்து அறிக்கை ஒன்றை தயார் செய்து கல்லூரி கல்வி இயக்குநருக்கு அனுப்புக
2. செய்தியாளர் அட்டை – பருவ இதழ்கள் நிறுவனங்களில் பணியாற்றும் செய்தியாளர்களுக்கு செய்தியாளர் அட்டை வழங்குதல் - புதிய வழிகாட்டி விதிமுறைகள் குறித்த ஒரு அரசாணை வரைக
3. தமிழ்நாடு தொல்லியல் துறை சார்பாக 'கீழடி அருங்காட்சியகம்' அமைத்திட வேண்டிய தேவை குறித்துத் திட்ட மதிப்பு அறிக்கை ஒன்றை வரைக.

APOLLO STUDY CENTRE

**கேள்வி எண் 8:** **20 மதிப்பெண்கள்**

**a. கீழ்க்காணும் சொற்களை உமது சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக**

1. வானியல் அறிவு
2. ஏற்றுமதி
3. அழியாத செல்வம்
4. இளமைப்பருவம்

**b. பின்வரும் இணைச் சொற்களைப் பயன்படுத்தி ஒரே தொடர் அமைக்க**

1. துணி துனி
2. பணி பனி
3. தினை திணை
4. அரண் அரன்

**c. பிரித்து எழுதுக**

1. வெண்குடை
2. பொற்கோடு
3. கொங்கலர்
4. அவனளிபோல்

**d. எதிர்மறை வாக்கியமாக மாற்றி எழுதுக**

1. கல்விச் செல்வத்தை அனைவரும் போற்றுவர்
2. மாதவி நடனம் கற்றாள்
3. கோதை பெரியபுராணம் பயின்றாள்
4. நந்தன் தேநீர் அருந்துவான்

**e. பிழை நீக்கி எழுதுக**

1. நமஸ்காரம் என்று சாஷ்டாங்கமாக விடுந்தவனை ஆசிர்வதித்தேன்
2. பிரயாணி பிரயாணத்தை ரத்து செய்தவுடன் ரூபாய் பட்டுவாடா செய்யப்பட்டது.
3. செல்வனுக்கும் கிள்ளைக்கும் தலா ஐந்து புஸ்தகம் கொடு
4. குறிஞ்சி தாக்கல் செய்த வழக்கு சுமுகமாகப் பைசல் செய்யப்பட்டது

APOLLO STUDY CENTRE



அறிவுக்கு ஏற்றது, மக்களுக்கு நன்மை பயப்பது,
மக்களின் அறிவை வளர்ச்சியடையச் செய்வது எதுவோ
அதைப் பற்றியே பேசு.

-தந்தை பெரியார்